Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்க காலத் தமிழரின் வேளாண்மையில் மேலாண்மை

ஜி.டி.பன்னீர்செல்வம்
முழுநேரமுனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி , சேலம் -7.
மின்னஞ்சல் : panneerpoo24@gmail.com

28

## ஆய்வு நோக்கம்

பண்டையத் தமிழர் தொன்மையையும், வாழ்வையும், பெருமையையும் அறிந்துக் கொள்ளச் சங்ககால இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. அக்கால மக்களின் உணவுத் தேவை என்பது சமூகத்தின் அடிப்படைத் தேவையாகவும் விளங்கியுள்ளது. தமிழர்கள் இயற்கையாகவே இயற்கையோடு இயந்த வேளாண்மை வாழ்க்கையை மேலாண்மையை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். ஆகவே வேளாண்மையே தங்கள் வாழ்வின் உயிர் மூச்சியாகவும், உயிர் நாடியாகவும் வாழ்ந்தனர். ஆழ உழுது அகல விதைக்கும் நுட்பத்தையும், சுழற்சி முறையில் பலவித பயிர்களையும் பயிரிடுதல், ஏரி, குளம் எவ்வடிவத்தில் இருந்து வேண்டும் என்ற மதிநுட்பத்தால் சிறந்து விளங்கினர். சங்கக் கால மக்களின் வேளாண்மையில் மேலாண்மை சிந்தனைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழரின் அக வாழ்வையும், புற வாழ்வையும் இயற்கைச் சூழல் பருவகால பயிர்களையும், விதைகளைத் தேர்வு செய்யும் முறைமையும் பயிர் நுட்ப சிந்தனையும், ஒவ்வொரு பயிர்களுக்கு நீரின் தேவையறிந்து நீர்பாசனம் நுட்பமும், தானியங்களை பூச்சிகளிலிருந்து பூச்சிகளிடமிருந்து பாதுகாத்த நுட்பமும், விலங்குகளிடமிருந்து பயிர்களை காவல் காத்த நுட்பமும் தமிழரின் வேளாண்மையில் மேலாண்மையை காட்டுகிறது.

## உழவுத் தொழிலின் மேலாண்மை

தமிழ் இலக்கியங்களில் வேளாளர் உழவர் உலகத்தாருக்கு ஆணிவேர் என்பர். மலையை ஒட்டியைப் பகுதியில் நீர் ஊற்றுகள் செறிவாக இருப்பதையும், மலைப் பகுதியில் ஆடு, மாடுகளை மேய்ச்சல் களமாகவும் இருப்பதையும், உழவன் ஓய்வின்றி உழைப்பனவாக இருக்கிறான் என்பதனை நற்றிணையில்,

> "மலை கண்டன்ன நிலைபுணர் நிவப்பின்"
> பெருநெல் பல்கூட்டு எருமை உழப
> கண்படை பெறா அது தண் புலர் விடியல்"[1]

இப்பாடல் வழியாக அறிய முடிகிறது.

தானியங்களை சுத்தம் செய்வதற்கு பருவகாலக் காற்றுகளையும், களம் அமைத்து காற்று

வீசும் திசைக்கு எதிர்திசையில் தானியங்களைத் தூற்றியுள்ளனர். இதனை,

“கள்ளார் களமர் பகடுதளை மாற்றிக்
கடுங் காற்றெறியப் போகிய துரும்புடன்”

என்ற அகப்பாட்டு வரிகள் புலப்படுத்துகின்றன.

**நிலைக் களம் பாகுபாடு**

பண்டைத் தமிழர் இயற்கையை அவற்றின் தன்மைக்கேற்ப மலையும் மலை சார்ந்த நிலமும், காடும் காடு சார்ந்த நிலமும், குறிஞ்சி, முல்லையும் வன்புலம் என்றும், இந்நிலத்தின் செம்மண் சார்ந்த நிலப்பகுதியாக அறியமுடிகிறது. மருதமும், நெய்தலும் மென்புலம் என்றும், இந்நிலத்தின் மண் கரிசல் பகுதிச் சார்ந்த மண் வகையாக இவ்நிலப் பகுதி அறியமுடிகிறது. மண்ணின் வளத்திற்கேற்ப ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

வன்புலம் – முல்லை - குறிஞ்சி
மென்புலம் – மருதம்
புன்புலம் – முல்லை
படப்பலை – மனைப்புறத்தைச் சுற்றியுள்ள தோட்டம்
விடுநிலம் – வேளாண்மைக்கு பயணற்ற மேய்ச்சல் நிலம்
முரம்பு கரம்பை உவர் நிலம்

**வன்புலம்**

**“வன்புலக் காட்டு நாட்டதுவே”[2] நற்-பாடல் எண். 59.**

குறிஞ்சி, முல்லை ஆகிய இரண்டு நிலத்திலும் மழைக்காலங்களில் நீர்வளம் மிகுந்தும், மற்ற காலங்களில் நீர் வளம் மிகுந்தும், மற்ற காலங்களில் நீர் வளம் குறைந்து காணப்படுவதால் இந்நிலப்பகுதி கரடு முரடான மண்ணையும், செம்மண் வகையைக் கொண்டதாக காணப்படுகிறது.

**மென்புலம்**

**“மென்புலம் வைப்பின் நல்நாட்டுப் பொருங்”[3]**

புறம் பா.எண். 42. ப.எண். 4-38

மருத நிலம் வயலைச் சார்ந்த நிலப்பகுதியில் இருப்பதால் மலைகளில் பொழிகின்ற மழைநீர் சமவெளி பகுதியை அடைந்த்தும் ஏரி, குளம் போன்றவற்றில் நீர் சேமிக்கப்படுகிறது. ஆகையால் மருத நிலம் மென்புலமாகவும், களிமண்ணாகவும் பயிர் விளைச்சலுக்கு ஏற்றதாகவும் உள்ளன.

**புன் புலம்**

**“புன்புலம் வித்தும் வன்கை வினை ஞர்”4**

பதிற்று பாடல் எண். 58 ப.எண். 406

முல்லை நிலத்தில் இயற்கையான நீர்பாசன வசதிகளின்றி கிணறு போன்ற செயற்கையான நீர்ப்பாசன வசதிகளைப் பெறும் வேளாண்மையை புன் நிலம் என அழைக்கப்படுகின்றன.

**கரம்பை நிலம்**

**"விடுநிலக் கரம்பை விடரனை நிறைய"[5]**

பதிற்று – பா.எண். 28 (ப.எண். 396)

கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கென பயன்படுத்தப்பட்ட நிலம் விடு நிலம் என்று அழைக்கப்படுகின்றன. கரம்பை நிலைம் மண்ணும் நீரும் சேர்ந்து சகதிகளகாவும், நீரை உறிஞ்சும் சுன்மையின்றி காணப்படுவதால் கரம்பை மேய்ச்சல் பகுதியாக அறியமுடிகிறது.

**உவர் நிலம்**

"களர்படு கூவல் தோண்டி நாளும்
புலைத்தி கழீஇய துவெள் அறுவை"[6]

புறம் – பா.எண். 311, ப.எண். 488

விளைச்சலுக்கு தேவையான சத்துகளை இழந்த மண் உவர் மண்ணாக அறியமுடிகிறது. இம்மண்ணில் விதைகள் முளைவிடுவதும் அரிதான ஒன்றாக அறியமுடிகிறது. இம்மண்ணைக் கொண்டு சாலை அமைத்தல், வீட்டைச் சுற்றியும் மேடு அமைத்தல் போன்ற பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றன.

**நீர்ப்பாசன நுட்பம்**

வேளாண்மைக்கு நிலவளம் எவ்வளவு முக்கியமே அதைவிட முக்கியமாக்க் காணப்படுவது நீர்ப்பாசனம் நீர் இல்லாமல் இவ்வுலகம் அமையாது என்று நற்றிணைப் அடி பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

"நீர் இன்றி அமையா உலகம் போல"[7-]

நற்றிணை – பா.எண். 1, ப.எண். 134

இக்கூற்றையே வள்ளுவரும் பறைசாற்றுகிறது

"நீர் இன்று அமையாது உலகு" எனில் யார் யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு"[8] (குறள் எண். 20, ப.எண். 14)

நன் செய்ப் பயிர்களுக்குக் குளம், ஆறு போன்றவற்றிலிருந்து வாய்க்காலிருந்து நீரைப் பிரித்து பாசன வதி ஏற்படுத்தி பராமரிக்கப்பட்டுள்ளன. இதன் நிலம் நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்து நன்செய் நிலம் பயனடைந்தது.

"நீர்த் தெவ்வு நீரைத் தொழுவர்
பாடு சிலம்பு அகல் ஆம்பியன்
கயன் அகைய வயல் நிறைக்கும்"[9]

மதுரைக்காஞ்சி, பா.எண். 89-92, ப.எண். 591

காவிரி, பெண்ணை, தாமிரபரணி முதலிய ஆறுகள் புன்செய் நிலமெல்லாம் நன்செய் நிலமாக மாற்றின. ஏற்றம் இறைத்து வேளாண்மையில் ஏற்றம் பெற பாடுபட்டனர் என்பதனை சங்க இலக்கியங்கள் வழியாக அறியப்படுகிறது. ஓர் ஊர் சிறப்படையவதற்கு அங்கு கிடைக்கும்

வேளாண்மைப் பண்டங்கள் காரணமாக அமையும். அவையே விளைவதற்கு அடிப்படையாக அமையவன விளைநிலங்கள் ஆகும். இதனை,

“நீரான் வீறுஎய்தும் விளைநிலம் நீர் வழங்கும்
பண்டத்தால் பாடு எய்தும் பட்டினம்”[10]
நான்மணி – பா.எண். 83, ப.எண். 1126

பண்டைத் தமிழரின் வாழ்க்கையில் இயற்கையின் குறிப்பிடத்தக்கது நீர், நிலம், காற்று முதலின மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாதக் கூறுகளாக அமைந்துள்ளன.

**விதைத் தேர்வு செய்தல்**

வேளாண்மைக்கு மிக முக்கியமான தெரிவு விதைகளை பாதுகாப்பாக சேமித்து வைத்தலாகும். காற்று புகாவண்ணம் கூதிர் போன்ற கூம்பு வடிவத்தில் அல்லது தாழிகள் போன்ற வடிவத்திலேயே பூச்சிகள் உருவாகாமலிருக்க நன்கு வெயிலில் காயவைத்தும் தானியங்களைச் சேமித்து வேளாண்மைக்கு பயன்படுத்தினர். ஆகையால் பண்டைத் தமிழரின் விதைகளை தெரிவு செய்யும் முறைமை அன்றைய அறிவியல் தொழில் நுட்பத்தையும், அறிவுசார் வேளாண்மை உத்திகளையும் புலப்படுத்துகிறது. இதனை,

“குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்
குரல் உனக்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து”[11]
(புறம் – பாடல் எண். 11-12, ப.எண். 491)

என்ற புறநானூற்றப் பாடல்வரியில் விதைத் தினைகளையும் பதப்படுத்திப் பாதுகாத்தனர். பண்டையத் தமிழர்கள் விதைகளைத் தேர்ந்தெடுத்த அறிவியல் நுட்பத்திற்குச் சான்றாக திகழ்கிறது.

**பயிர்களின் காவல் காப்பு முறைமை**

வேளாண்மைக்க் மட்டுமின்றி மண்ணுயிரில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் பயிர்கள் பயன்படுகின்றன. பயிர் பாதுகாப்பு என்பது உழைப்பின் அறுவடையாக கருதப்படுகிறது. விலங்குகளிடமிருந்து வேளாண்மைப் பயிர்களைப் பாதுகாக்க அகழி முறையைப் பயன்படுத்தியுள்ளனர். கொசுவை விரட்ட நொச்சியிலைகளையும், பாம்புகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள புதினா செடியையும், யானைகளுக்கு தேனீக்களின் சப்தம் எரிச்சலூட்டுவதாகவும் உள்ளன. ஆண்கள் இரவு காவல் பணிக்கும், பெண்கள் பகல் காவல் பணிக்கும் சென்றனர். இரவுக் காவல் பணியின் போது குளிர்காய அதிலை எறிந்தனர். பரந்த நிலப்பரப்பைச் கண்காணிக்க கண்காணித்தனர். களிறு திணைக்கதிர்களை உண்ண வரும்போது கணவன் தீப்பந்த்த்தை எடுத்து எய்தான் என்று நற்றிணைப் பாடல் கூறுகின்றன.

“வாலா வேழம் வணர்குல கவர்தலின்,
கானவன் எறிந்த கடுஞ்செல் நெகிழி
வேய்பயில் அடுக்கம் சுடர மின்னி”[12] (நற்றிணை பா.எண். 393-4-6) ப.எண். 199

**தொகுப்புரை**

- பண்டைத் தமிழரின் வேளாண்மைப் பற்றிய விளக்கம், வேளாண்மையில் நிலம் சார்ந்த செயல் முறைகளும், நுட்பங்களும் விளக்கப்பட்டுள்ளன.
- வேளாண்மையில் பழந்தமிழருக்கு இருந்த ஆர்வமும், ஈடுபாடும் இதன் மூலம் புலனாகிறது. காலமறிந்து விதைத்தல், நீரை முறையாகப் பயன்படுத்துதல், பிற விலங்குகளிடமிருந்து பயிரைப் பாதுகாத்தல் அறுவடை செய்தும் முறையாகத் தானியங்களைப் பாதுகாத்தல் ஆகியன வேளாண்மையில் மேலாண்மைச் சிந்தனைகள் மேலோங்கி இருந்த்தை அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. சுப்பிரமணியன்.ச.வே - **சங்க இலக்கியம் மூலம் முழுவதும்**
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை -8,
பதிப்பு ஆண்டு – 2011

2. சாமி.சிதம்பரனார் (ப.ஆ) - **திருக்குறள் பொருள் விளக்கம்**
கண்ணப்பன் பதிப்பகம்,
19, கண்ணதாசன் சாலை,
தி.நகர், சென்னை -17,
நவம்பர் – 2002

3. பசுபதி.ம.வே - **செம்மொழித் தமிழ்**
இலக்கண இலக்கியங்கள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், பதிப்பு ஆண்டு -2010

**அடிக்குறிப்புகள்**

1. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 143.
2. ச.வே.சுப்பிரமணியன், நற்றிணை, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 143.
3. ச.வே.சுப்பிரமணியன், புறம், சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 438
4. ச.வே.சுப்பிரமணியன்,பதிற்றுப்பத்து, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 406.
5. ச.வே.சுப்பிரமணியன், பதிற்று, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 396.
6. ச.வே.சுப்பிரமணியன், புறம், சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 488.
7. ச.வே.சுப்பிரமணியன்,நற்றிணை, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 134.

8. சாமி.சிதம்பரனார், திருக்குறள் பொருள் விளக்கம், ப.எண். 14.
9. ச.வே.சுப்பிரமணியன், மதுரைக்காஞ்சி, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 591.
10. மா.வே. பசுபதி, நான்மணி, செம்மொழித் தமிழ், ப.எண். 1126.
11. ச.வே.சுப்பிரமணியன், புறம், சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 491.
12. ச.வே.சுப்பிரமணியன், நற்றிணை, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப.எண். 199.